# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை (திருத்தச்) சட்டம்

---

*[1990, நவெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1990 நவெம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.00

1990 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கைத்
தேயிலைச் சபை (திருத்தச்) சட்டம்

[1990, நவெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 52/89

1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டத்தின் 5அ, 5ஆ, 5இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தில் 5அ, 5ஆ, 5இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

" தேயிலைப் பேரவை.

5அ (1) (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேயிலைப் பேரவை ஒன்று இருத்தல் வேண்டும். அது சிறப்பாக நடுகை, தயாரிப்பு, விற்பனை, ஏற்றுமதி, நிதி என்பன தொடர்பில் தேயிலைக் கைத்தொழிலில் அறிவைக் கொண்டவர்களான அல்லது அதில் அனுபவத்தைக் கொண்டவர்களான ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இருபக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் உறுப்பினரொருவர், அதன் சார்பில் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அஞ்சலொன்றின் மூலம் எந்த நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(3) அமைச்சரானவர், எந்த நேரத்திலும், அதற்கான காரணமொன்றைக் காட்டாமல் பேரவையின் உறுப்பினரொருவரைப் பதவியினின்று அகற்றலாம்.

(4) பேரவையின் உறுப்பினரொருவர், இறப்பின் மூலம், பதவிதுறப்பின்மூலம், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்குமிடத்து, அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம், அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர், எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் எஞ்சியுள்ள பதவிக்காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) பேரவையின் உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்தினால் தற்காலிகமாகத் தமது பணிகளை நிறைவேற்ற முடியாதிருக்குமிடத்து, அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென, வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(6) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையின் உறுப்பினரொருவரின் பதவிக் காலம், மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(7) காலங் கழிவதன் காரணமாகப் பதவியை வறிதாக்கும் உறுப்பினரொருவர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(8) அமைச்சரானவர், பேரவையின் உறுப்பினரொருவரைப் பேரவையின் தவிசாளராகவும் வேறோர் உறுப்பினரைப் பேரவையின் துணைத் தவிசாளராகவும் நியமித்தல் வேண்டும்.

(9) பேரவையின் தவிசாளரானவர் அல்லது துணைத் தவிசாளர், அதன் சார்பில் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அஞ்சல் ஒன்றின் மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(10) அமைச்சரானவர், எந்த நேரத்திலும், அதற்கான காரணத்தைக் காட்டாமல் பேரவையின் தவிசாளரை அல்லது துணைத் தவிசாளரைப் பதவியிலிருந்து விலக்கலாம்.

(11) பேரவையின் தவிசாளரது அல்லது துணைத் தவிசாளரது பதவிக்காலம், பேரவையிலான அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(12) பேரவையின் தவிசாளர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறு காரணத்தினால் தமது பணிகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராகவுள்ளவிடத்து, அமைச்சரானவர், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கெனப் பேரவையின் வேறு உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

(13) பேரவையானது, அத்தகைய அதன் கூட்டம் தொடர்பிலும், கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பிலுமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

பேரவையின் பணி.

5ஆ. பேரவையின் பணியாவது, நடுகை, தயாரிப்பு, விற்பனை, தயாரிப்பும் ஏற்றுமதியும் என்பன உட்படத் தேயிலைத் தொழிலின் எல்லா அம்சங்கள் மீதும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும் என்பதாகும்.

பேரவையின் கடமைகள்.

5இ. தேயிலைக் கைத்தொழில் தொடர்பில், அல்லது இச்சட்டத்தின் நிருவாகம் தொடர்பில் ஆலோசனை வழங்கப்படவேண்டுமென அமைச்சரால் ஆற்றுப்படுத்தப்படக்கூடியவாறுன அத்தகைய எல்லாக் கருமங்கள் மீதும் பேரவை ஆலோசனை வழங்குவது அதன் கடமையாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய கருமமானது ஆலோசனைக்காகப் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படவில்லை என்பது எவ்வாறிருப்பினும், இப்பிரிவிலுள்ள எதுவும், தேயிலைக் கைத்தொழிலின் அல்லது இச்சட்டத்தின் நிருவாகத்தின் அம்சமெதிலும் அமைச்சருக்கு ஏதேனும் விதப்புரைசெய்வதிலிருந்து பேரவையைத் தடைசெய்கின்றதென வாசிக்கப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.